1974 ஏப்ரல் 2]

கொல்லிமலையில் புதிய பள்ளி

***705 வினா—திரு. சி. சின்னவெள்ளையன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் பையில்நாடு என்ற இடத்தில் நடுநிலைப்பள்ளி (8-ஆம் வகுப்புவரை) துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலையில், பையில்நாடு என்ற இடத்தில் நடு நிலைப்பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் கல்வித்துறையில் இல்லை. ஆனால் உயர்நிலைப்பள்ளி துவக்கும் திட்டம் ஒன்று அரி சன நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

கோவளம் கடற்கரை

***706 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரையினை சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். மாமல்ல புரத்தை அனைத்து நாட்டுக் கடற்கரை விழைவிடமாக (International Beach Resort) மேம்படுத்துவதற்குரிய செயல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக, இந்திய அரசு ஆதரவில் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கியநாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப் பட்ட கடற்கரையைப் பார்வையிட்டனர். குறிப்பாக முட்டுக்காடு. கோவளக் கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படு கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கோவளத்தை மேம்படுத்தும் திட்டத்தில் என்னமாதிரியான காரியங்களெல்லாம் செய்தால் சுற்றுலா வருகிறவர்களைக் கவரக்கூடும் என்று